பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**09 09 2026 WEDNESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வேற்றுமையில் ஒற்றுமையே நம் நாட்டின் பலம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. நாடு முழுவதும் ரயில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு வகை செய்யும் 20 ஆயிரத்து 804 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

3. விவசாயிகளின் நலனை கருத்தில்கொண்டு புதிய விதைச்சட்டத்தை கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

4. பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும் — இலங்கையும் கையெழுத்திட்டுள்ளன.

5. 17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Shaina Manimuthu** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>>>

வேற்றுமையில் ஒற்றுமையே நம் நாட்டின் பலம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

அருணாச்சல சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் இன்று உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

ஜனநாயகத்தின் அன்னையாக இந்தியா திகழ்கிறது என்றும், இதற்கு பெருமை சேர்க்கும் வகையில் மக்கள் பிரதிநிதிகள் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அடுத்த 21 ஆண்டுகளுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற ஒற்றை இலக்கோடு அனைவரும் செயல்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சட்டப்பேரவைகளில் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற வேண்டியது அவசியம் என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

நாடு முழுவதும் ஐந்து மாநிலங்களுக்கு உட்பட்ட 14 மாவட்டங்கள் பயன்பெறும் வகையிலான மூன்று ரயில் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், 10 ஆயிரத்து 783 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதாக கூறினார்

மேற்குவங்கம், ஜார்கண்ட், ஒடிஷா, மத்தியப்பிரதேசம் மற்றும் சட்டீஸ்கர் மாநிலங்கள் இதன்மூலம் பயனைடையும் என்று அவர் தெரிவித்தார்.

இதேபோல், தமிழகம் உட்பட நான்கு மாநிலங்களின் ரயில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான 10 ஆயிரத்து 21 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

இந்த திட்டங்களை அடுத்த நான்காண்டுகளுக்குள் நிறைவேற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும் — இலங்கையும் கையெழுத்திட்டுள்ளன.

தேசிய மாணவர் படை மற்றும் தேசிய பாதுகாப்பு கல்லூரிகளின் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இலங்கை விமானப்படைக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தமும் இதில் அடங்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, அரசுமுறைப் பயணமாக இலங்கை சென்றுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், அந்நாட்டு அதிபர் திரு **Anura Kumara Dissanayake**-வுடன் பேச்சு நடத்தினார்.

இந்திய பாதுகாப்புப்படை சார்பில் கட்டப்பட்டுள்ள பாலங்களையும் இரு தலைவர்களும் திறந்துவைத்தனர்.

<<<<<>>>>>>>

பிரிக்ஸ் அமைப்பின் நிதியமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டம் மும்பையில் இன்று தொடங்கியது.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இந்த கூட்டத்தில், இதற்கான பணிக்குழு அளித்த பரிந்துரைகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>>

விவசாயிகளின் நலனை கருத்தில்கொண்டு புதிய விதைச்சட்டத்தை கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

போலி விதை பயன்பாட்டை தடுக்கும் வகையில், இந்த சட்டம் கொண்டுவரப்பட உள்ளதாக வேளாண் துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுதொடர்பாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான், விவசாய சங்க பிரதிநிதிகளுடன் நாளை ஆலோசனை நடத்த உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கஷ்மீர் தொடங்கி கன்னியாகுமரி வரை விவசாயிகள் தங்களது கருத்துகளை தெரிவிக்கும் வகையில், இந்த ஆலோசனைக்கூட்டம் நடைபெற உள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் **740** கிலோ போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

வருவாய் புலனாய்வு அதிகாரிகள் கடந்த **15** நாட்களில் மேற்கொண்ட சோதனையின்போது இவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

போதைப்பொருள் கடத்தலை தடுக்கும் வகையில் இந்த சோதனை நடத்தப்பட்டதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<>>>>>>>

ஆசியான் — இந்தியா வேளாண் அமைச்சர்கள் நிலையிலான கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

வேளாண் துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.

<<<<<>>>>>>>

மும்பை உயர்நீதிமன்ற நீதிபதியாக திரு **Mahesh Chandra Tripathi** இன்று பதவியேற்றார்.

மும்பை மக்கள் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மகாராஷ்ட்ரா மாநில ஆளுநர் திரு **Jishnu Dev Varma** அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

<<<<<>>>>>>>

இமாச்சலப்பிரதேச முதலமைச்சர் திரு **Sukhvinder Singh Sukhu** இன்று புதுதில்லியில் மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்கை சந்தித்து பேசினார்.

பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக இமாச்சலப்பிரதேச அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மூன்று இடங்களில் வானியல் மையங்கள் ஏற்படுத்துவது தொடர்பாகவும் முதலமைச்சர் விவாதித்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>

ஊழல் காரணமாக ஜனநாயகத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை குறைந்து வருவதாக கேரள உள்துறை அமைச்சர் திரு ரமேஷ் சென்னிதாலா கூறியுள்ளார்.

தமிழகத்தின் வேலூர் மாவட்டம் காட்பாடியில் உள்ள பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

ஊழலை ஒழிக்க உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

கேரளத்தில் லஞ்சத்தை ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளையும் அவர் பட்டியலிட்டார்.

போதைப்பொருள் பயன்பாட்டை முற்றிலுமாக ஒழிக்க அனைவரும் உறுதியேற்க வேண்டும் என்றும் திரு ரமேஷ் சென்னிதாலா கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>>

குஜராத் சட்டப்பேரவையின் மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இந்த கூட்டத்தொடரில், ஏழு முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

<<<<<>>>>>>>

கர்நாடகாவில் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு **Satish Jarkiholi** -க்கு தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறையினர் சோதனை மேற்கொண்டனர்.

பெங்களூருவில் உள்ள **18** இடங்களில் இந்த சோதனை நடைபெற்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<<>>>>>>>

மகாராஷ்ட்ராவில் விளையாட்டுத்துறையில் சாதனை படைத்தவர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகளில் ஐந்து சதவீத இடஒதுக்கீடு வழங்கும் மாற்றியமைக்கப்பட்ட திட்டத்திற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்த விளையாட்டு வீரர்களின் சமூக பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>>

அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தம் கிட்டதட்ட இறுதி செய்யப்பட்டுள்ளதாக வர்த்தகத்துறை செயலர் திரு ராஜேஷ் அகர்வால் கூறியுள்ளார.

இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பான பேச்சுக்கள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக கூறினார்.

குறித்த காலத்திற்குள் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என்றும் திரு ராஜேஷ் அகர்வால் தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

அஸ்ஸாமில் குழந்தைகள் பாதுகாப்பிற்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், குழந்தைகள் பாதுகாப்பில் உள்ள குறைபாடுகள் களையப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இதுதொடர்பாக, அஸ்ஸாம் அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளையும் முதலமைச்சர் பட்டியலிட்டுள்ளார்.

<<<<<>>>>>>>

பீகாரில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக 14 மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஐந்து நாட்களாக பெய்துவரும் மழை காரணமாக, இந்த மாவட்டங்களுக்கு உட்பட்ட 40 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இம்மாதத்தில் இயல்பைவிட 31 சதவீதத்திற்கும் கூடுதலாக மழை பதிவாகியுள்ளதாக அம்மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் கூறியுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<<<<<>>>>>>>

நேபாள வெள்ளத்தின் பாதிப்பு குறித்து ஆய்வுசெய்வதற்காக ஏழு பேர் கொண்ட நாடாளுமன்ற துணைக்குழுவை அந்நாட்டு அரசு ஏற்படுத்தியுள்ளது.

RSP உறுப்பினர் Sushila Khadka இந்த துணைக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெள்ளத்தால் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்தும், நிதி இழப்பு குறித்தும் இக்குழு ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் என்று நேபாள அரசு கூறியுள்ளது.

<<<<<>>>>>>>

**17** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Shaina Manimuthu** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **15-10, 15-11** என்ற செட் கணக்கில், சீனாவின் **Zhou Yun Yao**-வை வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் **Deborah John — Eswar Sai Katam** இணையும், **15** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் இரட்டையர் பிரிவில் **Fakrudeen Ali Ahamed - Shourya Samala** இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

---------------

வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Rounak Chouhan** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், **21-13, 21-16** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Shogo Ogawa** -வை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவுகளில் **Rakshitha Sree, Isharani Baruah,** மான்சி சிங் ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

--------------

சீனாவில் நடைபெற்றுவரும் ஆசியகோப்பை ஜூனியர் ஹாக்கிப்போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா — சீனா இடையேயான ஆட்டம் கோல் இன்றி டிராவில் முடிவடைந்தது.

<<<<<**END**>>>>>>